**உடபலாத பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

.

உடபலாத பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணபிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடபலாத பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுந டைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிள கணக்காய்வுக் கட்டணங்களுக்காக கணக்குகளில் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படும் | செலவினங்களுக்காக கணக்குகளில் நிதி ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பொது நடவடிக்கைகளுக்காக கிடைத்திருந்த ரூபா 8,081,293 ஆன 03 காணித் துண்டுகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | காணி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | சபைக்குரிய நிலுவை கடை வாடகை ரூபா 648,097 தொகையை பதிவழிக்கும் போது மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | - மேற்படி - | ஆண்டின் செலவினம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டுள்ள 02 சொத்து விடயங்கள் மற்றும் பொறுப்பு விடயமொன்றிற்குரிய ஆரம்ப புத்தகங்களில் காண்பிக்கப்பட்ட மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 2,084,962 ஆன இணக்கிமன்மை ஒன்று அவதானிக்கப்பட்டது. | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படும் | வேறுபாடுகளை இனங் கண்டு கணக்கு மீதிகள் சீர் செய்யப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 127 ஆம் பிரிவு | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 60 மயானங்கள் கையேற்கப்பட்டிருக்க வில்லை. | உரித்தினை கையேற்பதற்கு பிரதேச செயலாளருக்கு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 27,371,185 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 33,000,479 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா | 2021 மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (i) | வீதவரியும் வரியும் | 2,399,000 | 5,748,890 | 6,482,593 | 4,821,859 | 5,569,400 | 5,615,196 | 5,105,014 | 5,555,561 |
| (ii) | வாடகை | 6,175,300 | 4,430,270 | 4,050,709 | 2,939,915 | 6,182,220 | 4,036,571 | 3,228,425 | 2,560,354 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 6,142,590 | 3,435,980 | 3,549,880 | 4,188,200 | 6,175,000 | 5,011,504 | 2,901,854 | 4,302,100 |
| (iv) | ஏனைய வருமானம் | 41,340,000 | 35,216,269 | 55,522,773 | 31,417,081 | 9,409,200 | 7,464,360 | 5,268,924 | 51,723,585 |
| | கூட்டுத் தொகை | 56,056,890 | 48,831,409 | 69,605,955 | 43,367,055 | 27,335,820 | 22,127,631 | 16,504,217 | 64,141,600 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி**<br>மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 1,663,740 ஆன நிலுவை யொன்று காணப்பட்ட துடன் அதில் ரூபா 5,000 இற்கு மேற்பட்ட 67 ஆதனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 579,897 ஆக இருந்தது. | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு தேவையான நடமாடும் நிகழ்ச்சிகள் மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்பட வுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (ஆ) | **ஏக்கர் வரி**<br>மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 119,125 தொகையான நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் ரூபா 3,000 இற்கு மேற்பட்ட 06 அலகுகளிலிருந்து ரூபா 30,706 ஆன மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | **நீர் வரி**<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3,038,804 நிலுவையொன்று காணப்பட்ட துடன் அதில் 01 ஆண்டுக்கும் 05 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட ரூபா 778,449 ஆன மீதியொன்று காணப்பட்டது அவ்வாறே நிலுவை மீதியிலிருந்து ரூபா 5,000 இற்கு மேற்பட்ட 169 நீர் | எஞ்சிய நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பாவனையாளர்களிடமிருந்து 1,222,999 ஆன மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |

**(ஈ) வாடகை**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 2,676,454 ஆன நிலுவையொன்று காணப்பட்டதுடன் அந்நிலுவை மீதியில் 01 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட அறவிடப்படாது காணப்பட்ட மீதி ரூபா 1,003,860 ஆக இருந்ததுடன் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்படும் மீதி ரூபா 1,137,237 ஆக இருந்தது | நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ரூபா 383,058 ஆன நிலுவையை அறவிட முடியாதுள்ளதாக | உடன்படிக்கை பிரகாரம் கடை வாடகையை அறவிடவதற்கு நடவடிக்கை எடுத்தால் வேண்டும் |

**(உ) முச்சக்கர வண்டி கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,245,500 தொகையான நிலுவையொன்று காணப்பட்டதுடன் அந் நிலுவையில் 52 முச்சக்கர வண்டிகளிலிருந்து ரூபா 5,000 இனை மிகைத்த ரூபா 312,000 ஆன மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை | - | உப உறுப்புரையின் பிரகாரம் வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**(ஊ) விளம்பர பதாகை கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 4,825,190 விளம்பர பதாதைகள் வருமானமொன்று அறவிடப்படாமல் இருந்ததுடன் அதில் 01 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட அறவிடப்படாதிருந்த மீதி ரூபா 2,942,700 ஆக இருந்தது. | நிலுவை கட்டணங்களை நினைவூட்டல் கடிதங்கள் மற்றும் செலுத்தாத 09 நிறுவனங்களுக்காக வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதாக | உப உறுப்புரையின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும் |

**(எ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 10,773,010 ஆக இருந்தது. . | நீதிமன்றத் தண்டப் பணம் தொடர்பாக பிரதான செயலாளரின் அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளதாக | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களைத பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 45 மில்லியன் செலவில் 2016 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த புசல்லாவ புதிய வர்த்தக கட்டிட தொகுதியின் 14 கடைகளுக்கு வழக்கொன்று காணப்பட்டதன் காரணமாகவும் 2022 செப்டம்பர் வரையில் ரூபா 171,000 ஆன வழக்கு கட்டணமொன்று சபைக்கு செலுத்துவதற்கு நேர்ந்திருந்ததுடன் அதற்கு மேலதிகமாக 14 கடைகளை ஆரம்பத்திலிருந்து குத்தகைக்கு வழங்க முடியாமல் விளைவற்று காணப்பட்டன. | ரூபா 171,000 ஆன வழக்கு கட்டணமொன்று சபைக்கு செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது | சிக்கல்களை தீர்வு செய்து கடைகளை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | புஸ்ஸல்லாவ கலுகலவத்த கலாச்சார நிலையத்தின் நிர்மாணத்திற்காக 2008 ஆம் ஆண்டின் போது அமைச்சின் ரூபா 1,000,000 நிதி ஏற்பாட்டின் பேரில் ஒப்பந்த சங்கம் ஒன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 956,809 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்த பெறுமதியை கொடுப்பனவு செய்யாமை காரணமாக சங்கத்தினால் வழக்கொன்று தொடரப் பட்டிருந்ததுடன் 2023 மார்ச் 24 ஆம் திகதிய தீர்ப்பின் பிரகாரம் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 956,809 கொடுப்பனவு செய்வதற்கு நேர்ந்திருந்தது. இத்தொகையை குறித்த அமைச்சிலிருந்து மீள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தடன் ரூபா 79,810 ஆன வழக்கு கட்டணங்களை கொடுப்பனவு செய்ய நேர்ந்ததன் காரணமாக சபை நிதியத்திற்கு ரூபா 1,036,619 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | வழக்கு தீர்ப்பினை பெற்றுக்கொண்ட பின்னர் வழங்குவதன் பின்னர் வழக்கு கட்டணமாக பிரதேச சபை செலவழித்த தொகையான ரூபா 79,810 ஆன தொகை மற்றும் ஒப்பந்த பெறுமதியான ரூபா 956,809 தொகை மீள் நிரப்புவதற்கு எதிர்பார்த்து உள்ளதாக | வழக்கு தீர்ப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும். |
| (இ) | ஆதன விற்பனை நிறுவனம் ஒன்றினால் பிரிக்கப்பட்ட டெல்டாவத்தை தோட்டத்தின் காணியின் 195 பேர்ச் மொத்தக் காணியின் 05 காணி பகுதிகள் பொது நடவடிக்கைகளுக்காக பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டு இருக்கவில்லை. | பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள காணிப் பகுதியை பிம்சவிய சான்றிதழ் மூலம் கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை பிரைம் லேட்ன்ஸ் கம்பெனியால் மேற்கொள்ளப்பட்டு குறித்த சான்று பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுட்டுள்ளது | பொது நடவடிக்கைக ளுக்காக ஒதுக்கப்பட்ட காணிகளின் உரித்தினை சபைக்கு கையேற்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய 02 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 3,665,824 ஆக இருந்ததுடன் அதில் 01 ஆண்டுக்கு 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தை மிகைத்திருந்த கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 1,279,657 மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 614,835 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ரூபா 228,405 தொகை ஒன்று அரசின் வீட்டு வாடகை நிலுவைத் தொகையாகும். 05 ஆண்டுகளை மிகைத்துள்ள கடன்பட்டோர் மீதி நீதிமன்ற தீர்ப்பு பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் அறவிடப்படுவதாகவும் ரூபா 1,746,785 தொகையை பெற்றுக் கொள்வதற்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட 03 கடன் கொடுத்தோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,136,457 ஆக இருந்ததுடன் அதில் 01 ஆண்டிற்கும் 5 ஆண்டு களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,055,585 ஆகவும் 05 ஆண்டுகளை மிகைத்திருந்த மீதி ரூபா 532,871 ஆக இருந்தது. | 05 ஆண்டுகளை மிகைத்த மீதிகள் தொடர்பாக வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் அறவிடுவதாக | செலுத்த வேண்டிய நிலுவை கடன் கொடுத்தோர் தீர்வு செய்யப்பட வேண்டும் |
| (ஊ) | பிரதேச சபைக்கு பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட 03 ஏக்கர் 5.91 பேர்ச் காணியில் அத்துமீறி 24.07 பேர்ச் அளவிலான பகுதியொன்று நபர் ஒருவரினால் 02 நிரந்தர கட்டிடப் பகுதிகளை நிர்மாணித்திருந்ததுடன் 8.99 பேர்ச் அளவில் சிமேந்து கற்களினால் சுவர் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு தமது தனிப்பட்ட காணியாக்கி கொள்ளப்பட்டிருந்தது. 01 ரூட் 9.94 பேர்ச் அளவிலான பகுதியில் இன்னுமொருவரால் நிரந்தர கட்டிடம் ஒன்றையும் தற்காலிக கொட்டில் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதில் தேயிலைச் செய்கை பண்ணப்பட்டிருந்தது. பிரதேச சபைக்குரிய காணி அத்துமீறி வெளித்தரப்பினரால் கையேற்பதற்கு இடம் அளிக்கப்பட்டிருந்ததுடன் உரிய காணியை பொது நடவடிக்கை களுக்காக பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்துமீறிய நிர்மாணம் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என நினைவூட்டல் மற்றும் இறுதி அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளவுடன் அரசின் காணி உரித்தை மீளப் பெற்றுக் கொள்ள சட்டத்தின் கீழ் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு பொதுச் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | அத்துமீறிய நிர்மாணங்களை அகற்றி ஆதனங்களை பாதுகாத்தல் வேண்டும் |

## 3.2 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திகதியில் ரூபா 920,000 ஆன உழவு இயந்திரமொன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் 2017 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் விளைவற்று காணப்பட்ட போதும் திருத்தம் செய்வதற்கோ அல்லது ஏலவிற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | சபைக்கு சொந்தமான உழவு இயந்திரத்தை திருத்துவதற்கும் மோட்டார் சைக்கிளை பிரதே சபைக்கு கையேற்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | திருத்தி அமைக்கப்பட்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொழுவ பொது நூலகத்திற்காக CCTV கேமரா முறைமை ஒன்றை கொள்வனவு செய்வதற்காக மாகாண சபையில் பதிவு செய்யப்பட்டிருந்த 04 நிறுவனங்களில் இருந்து கூறுவிலை கோரப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக கருத்தில் கொள்ளாமல் 1988 சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் 178(9) இற்கு புறம்பாக நடவடிக்கை எடுத்து 2022 மார்ச் 02 ஆந் திகதி அளவில் கேள்வி கோராத நிறுவனம் ஒன்றிடமிருந்து ரூபா 440,500 இற்கு CCTV கேமரா முறைமை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது | 2021 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாட்டை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட போதும் எவ்வித விலை விவரங்கள் சபைக்கு கிடைக்காத இருந்ததுடன் மீண்டும் விலை கோரப்பட்ட போதும் எந்த ஒரு விலை விபரங்களும் சபைக்கு கிடைக்கவில்லை சந்தையில் சிக்கலான நிலைமை காரணமாக பற்றாக்குறை காணப்பட்டதாலும் கெமராவை பொருத்துவதற்கு இயலுமை உள்ள நிறுவனம் ஒன்று விலை விபரங்களை நேரடியாக அனுப்பியிருந்தது. எழுத்து மூல விலை விபரங்கள் கோர முடியாமல் போனதாக தெரிவிக்கப்பட்டது | பிரதேச சபை சட்டத்தின் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 3.4 ஒப்பந்த நிர்மாணத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பேஸ்ட்லி பாடசாலை மாவத்தையின் பாலத்தை அபிவிருத்தி செய்தல் - 1,000,000 ஆன நிர்மாணமொன்றின் 03 செலவின விடயங்களின் நிறைவேற்றாத பகுதிக்காகவும் அதற்குரிய போக்குவரத்துக் கட்டணங்களாக ரூபா 156,634 ஆன மிகை கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செய்யப்படாத வேலைக்காக ரூபா 156,534 தொகை கொடுப்பனவு தொடர்பாக நிர்மாணத்தை மேற்பார்வை செய்த தொழில்நுட்ப உத்தியோகத்தரிடமிருந்து எழுத்து மூலம் விளக்கங்கள் கோரப்பட்டுள்ளதுடன் பதில் கிடைக்காமை காரணமாக செய்யப்படாத வேலைக்காக கொடுப்பனவு | நட்டத்தை அறவிடுவதற்குரிய ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தால் அறவிடுவதற்கு உள்ளூராட்சி மன்ற ஆணையாளரிடமிருந்து ஆலோசனை கோரப்பட்டுள்ளது. | |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகை**<br>மீளாய்வாண்டின் இறுதியில் 12 பதவிகளில் 29 வெற்றிடங்களும் பதவியொன்றில் 16 மிகை களும் காணப்பட்டன. | பயிலுனர் பட்டதாரிகளை சேவை நிலையத்தில் ஈடுபடுத்தும் போது அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் 16 மிகை உருவாகியிருந்ததுடன் 29 வெற்றிடங்களுக்காக நாளாந்த அடிப்படையில் 16 ஊழியர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 02 உத்தியோகத்தர்களும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். | வெற்றிடங்களை பூர்த்தி செய்யப்பட வேண்டும் |
| **(ஆ) ஊழியர் கடன்**<br>1990 ஆம் ஆண்டு முதல் 2014 வரையான காலப்பதிக்குரிய 10 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 77,883 ஆன நிலுவை கடன் மீதியொன்றும் முன்னைய ஆண்டில் மரணித்த இரண்டு ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 273,110 ஆனால் கடன் மீதியும் அறவிடபட்டிருக்கவில்லை | 10 ஊழியர்கள் தொடர்பாக அவர்களின் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் பிணையாளிகளின் தகவல்களைத் தேடி பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதால் அறவீடுகளில் சிக்கல் காணப்படுகின்றன. | நிலுவை ஊழியர் கடன் அறவிடப்பட வேண்டும் |